 பட்டதாரி ஆசிரியர் கழகம் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது குறித்து

[1981 பிப்ரவரி 27

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இளநிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களுக்குரிய தகுதியைப் பெற்று, இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டு அந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இடைநிலை ஆசிரியருக்கான வேலையைச் செய்து கொண்டு பயனை அனுபவிக்கிறார்கள். அதற்குரிய வகையில் உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த அடிப்படை இதிலே இல்லவே இல்லை. இருக்கின்ற வேலையில், தகுதிக்கேற்ற சம்பளம் கொடுப்பது என்பது அரசுத் துறையிலே எங்குமே ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று.

(2) தென்னாற்காடு மாவட்டம், வடலூரிலுள்ள நெய்வேலி சிராமிக் தொழிற்சாலை மூன்று மாதங்களுக்கு மேலாகக் கதவடைப்பு செய்யப் பட்டுள்ளது குறித்து.

*** திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"தென்னாற்காடு மாவட்டம், வடலூரிலுள்ள நெய்வேலி சிராமிக் தொழிற்சாலை நிர்வாகம், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுத்தும், தொழிலாளர் இலாகா அதிகாரிகளின் ஆலோசனைகளை ஏற்க மறுத்தும், தொழிற்சாலையை மூன்று மாதங்களுக்கு மேலாகக் கதவடைப்பு செய்துள்ளது குறித்து".

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. நல்லசிவன் : இந்தப் பிரச்சினை குறித்து நேற்று நடைபெறுவதாக இருந்த பேச்சுவார்த்தை நடைபெற்றதா ? உடன்பாடு ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : லேட்டஸ்ட் இன்பர்மேஷன். நேற்று பேச்சுவார்த்தை நடந்தது. மேலும் நடைபெறுவதாக இருக்கிறது. தொடர்ந்தும் நடைபெறும். பேச்சுவார்த்தை நடத்துபவர் ஜாயின்ட் கமிஷனர் ஆஃப் லேபர் திரு. ராஜா சுப்பிரமணியம்.

@213-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ஆ. நல்லசிவன் : மூலதனத்தோடு ஒப்பிடும்போது நிகர லாபம் அதிகமாக இருக்கிறது. என்.டி.சி. மில், கூட்டுறவு மில் விஷயங்களில் சிபாரிசு செய்தது போல் 20 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தொகையை இனாமாகவாவது கொடுக்க சிபாரிசு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் நடைபெறும்.

4. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கையை அளித்தல்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கையை அவை முன் சமர்ப்பிக்கிறேன்.

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1979-80 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் விவாதம்.—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கின்றவர்கள் இல்லையென்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, கடைசி நேரத்தில் பல பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி பல முறை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். பேசப் போகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னாலேயே பெயர் கொடுக்க வேண்டும். பெயர் கொடுத்தவர்கள் இல்லையென்று நினைக்கின்றபோது, கடைசி நேரத்தில் பல பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தைச் சுருக்கி, விரிவாகப் பேசாமல் சுருக்கமாக விரைவில் பேசி முடித்து, ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சாரத்தினுடைய நிலையை நினைத்துப் பார்க்கிறபோது, நம்முடைய மாநிலம் ஒவ்வொரு ஆண்டும் மின்வெட்டில் இருக்கிற மாநிலமாக இருந்து வருகிறது. 75 சதவீதம் ஒவ்வொரு ஆண்டும் மின்வெட்டைச் சந்திக்கிறது என்ற